www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

SR-Nkl

# இரண்டாம் திருப்புத் தேர்வு – பிப்ரவரி 202

**10 - ஆம் வகுப்பு** **தமிழ்** பதிவு எண்.

காலம் : 3.00 மணி மதிப்

## பகுதி - I
(மதிப்பெண்கள் : 15)

குறிப்புகள் : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடை தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்

1. "கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது" – தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரு வினையாலணையும் பெயரும் முறையே.
அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல் ; பாடிய இ) கேட்டவர்; பாடிய ஈ) பாடல் ; கே

2. "உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்" – பாரதியார்
இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை ?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை

3. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது ................
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

4. "கத்தும் குயிலோசை – சற்றே வந்து
காதிற் படவேணும்" – பாரதியார், இவ்வரிகளில் இடம்பெற்றுள்ள வழுவ
அ) திணை வழுவமைதி ஆ) பால் வழுவமைதி இ) மரபு வழுவமைதி ஈ) கா

5. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது
அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கிய

6. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன ?
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லா
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாதத

7. "தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்" என்னு தொடர் உணர்த்தும் பொருள் ................................
அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர் ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர் ஈ) நெறியோடு நின்று காவல் கா

8. மேன்மை தரும் அறம் என்பது ...................................
அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது
ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
இ) புகழ் கருதி அறம் செய்வது
ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது

9. நதிவெள்ளம் காய்ந்துவிட்டால் நதி செய்த குற்றமில்லை விதி செய்த குற்றம் இ என்னும் வரிகளை எழுதியவர் ...........................
அ) கண்ணதாசன் ஆ) கம்பன் இ) சுரதா ஈ) பாரதித

10. தீவகம் என்னும் சொல்லின் பொருள் ...........................
அ) விளக்கு ஆ) தீ இ) தீவு ஈ) அகம்

11. கப்பலுக்குப் போன மச்சான் என்னும் நாவலை படைத்தவர்
அ) ஜெயகாந்தன் ஆ) நாகூர்ரூமி இ) சா.கந்தசாமி ஈ) கந்தர்

பாடலை படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

"வண்ணமும் சுண்ணமும் தண்நறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்"



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

12. இப்பாடல் பயின்று வரும் நூலின் பெயர் ..................................
அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம் இ) தேம்பாவணி ஈ) மணிமேகலை

13. இப்பாடலில் பயின்று வரும் எதுகை சொற்களை குறிப்பிடுக.
அ) வண்ணமும், சுண்ணமும் ஆ) பூவும், புகையும்
இ) பகர்வனர், பட்டினும் ஈ) வண்ணமும், பூவும்

14. இப்பாடலின் ஆசிரியர் பெயர் ..............................
அ) இளங்கோவடிகள் ஆ) கம்பர் இ) வீரமாமுனிவர் ஈ) சீத்தலைச்சாத்தனார்

15. இப்பாடலில் 'காருகர்' என்ற சொல்லின் பொருள் ..................................
அ) நெய்பவர் ஆ) வெற்றிலை விற்பவர் இ) ஓவியர் ஈ) சிற்பி

## பகுதி – II
(மதிப்பெண்கள் : 18)

### பிரிவு–1

**எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4 X 2 = 8

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்.
அ) காசி நகரத்தின் பெருமைகளைக் கூறும் நூல் காசிக் காண்டம்
ஆ) 'சிலம்புச்செல்வர்' என்று போற்றப்படுவர் ம.பொ.சிவஞானம்

17. மாஅல் – பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.

18. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

19. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர் ?

20. தீவக அணியின் வகைகள் யாவை ?

21. 'வினை' என முடியும் திருக்குறளை எழுதுக ?

### பிரிவு–2

**எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 5 X 2 = 10

22. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.
அ) ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
ஆ) நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர்.

23. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
அ) மடு – மாடு ஆ) சிலை – சீலை

24. தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.
அ) பசுமையான ........................ஐக் ........................ கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)
ஆ) பொதுவாழ்வில் .................... கூடாது .................இல் அவரை மிஞ்ச ஆள்கிடையாது. (நடித்தல், நடிப்பு)

25. ஒலித்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

26. கலைச்சொற்கள் தருக.
அ) Land Breeze ஆ) Belief

குறிப்பு : செவி மாற்றுத்திறனாளிக்கான மாற்று வினா விடுபட்ட எழுத்துகளை நிரப்புக.
அ) இ ..................... கு (பறவையிடம் இருப்பது) ஆ) கு ..................... தி (சிவப்பு நிறத்தில் இருக்கும்)

27. தொடர்களில் உள்ள எழுவாயை செழுமை செய்க.
அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும். ஆ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும்

28. அகராதியில் காண்க.
அ) கனலி ஆ) பூட்கை

## பகுதி III
(மதிப்பெண்கள் : 18)

### பிரிவு –1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 X 3 = 6

29. மழை நின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.
குறிப்பு : இலைகளில் சொட்டும் நீர் – உடலில் ஓடும் மெல்லிய குளிர் – தேங்கிய குட்டையில் 'சளப்தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் – ஓடும் நீரில் காகிதக் கப்பல்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

30. வாளித் தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத்தூரிகை,
இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.
தற்போது வெளிவருகிற சில உயர்வகைத் திறன்பேசியின் ஒளிபடக் கருவி, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டிருக்கிறது. கடவுச்சொல்லும், கைரேகையும் கொண்டு திறன்பேசியைத் திறப்பது பழமையானது. உரிமையாளரின் முகத்தை அடையாளம் கண்டு திறப்பது, இன்றைய தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு படம் எடுக்கும், காட்சியை அடையாளம் கண்டு அதற்கு ஏற்பத் தன்னை தகவமைத்துக் கொள்கிறது.

அ) திறன் பேசியைத் திறக்கும் பழைய முறைகள் யாவை ?

ஆ) திறன் பேசியில் படம் எடுக்கும் காட்சியை அடையாளம் கண்டு செயற்கை நுண்ணறிவு எவ்வாறு செயல்படுகிறது. ?

இ) உயர்வகை திறன்பேசிகளில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் எது ?

## பிரிவு–2

**எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 X 3 = 6**
**வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தமாற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது ?

33. 'முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார் ?

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) விருந்தினனாக ஒருவன் ....... எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடல்

(அல்லது)

ஆ) நவமணி வடக்க யில்போல் ......... எனத் தொடங்கும் தேம்பாவணிப்பாடல்

## பிரிவு–3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **2 X 3 = 6**

35. விடை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ? விளக்குக.

36. நிரல்நிறை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. அலகிட்டு வாய்பாடு எழுதுக.

குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு.

## பிரிவு–IV

(மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 X 5 = 25**

38. அ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப் பேச்சு ஒன்றை உருவாக்குக.

(அல்லது)

ஆ) இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. அ) உங்கள் பகுதியில் ஏற்பட்ட கடும் புயலில் சாய்ந்துவிட்ட மரங்களை அகற்றியும், பழுதுபட்ட சாலைகளைச் சீரமைத்தும், பழுதடைந்த மின்கம்பங்களை சரிசெய்தும் தருமாறு மாநகராட்சி ஆணையருக்குக் கடிதம் ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.





Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

41. சேலம் மாவட்டம் தாரமங்கலத்தில் கதவு எண் 35/5 இராஜாஜி வீதியில் வசிக்கும் கந்தசாமியின் மகன் இளங்குமரன் (15 வயது) என்பார் மாவட்ட மைய நூலகத்தில் சேர்வதற்காக நூறு ரூபாயைத் தன் தந்தையிடம் கேட்டுப் பெற்றுச் செல்கிறார். கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைக் கொண்டு படிவத்தை நிரப்புக.

42. அ) புயலின் போது நீங்கள், உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைபடுத்தி எழுதுக. (அல்லது)

ஆ) மொழி பெயர்க்க.

The Golden sun gets up each in the morning and starts its bright rays to fade away the dark. The Milky clouds starts their wandering. The colourful birds start twitting their morning melodies in percassion. The flowers. The flowers' tragrance fills the breeze. The breeze blows everywhere and makes everything pleasart.

செவி மாற்றுத் திறனாளிக்கான மாற்று வினா

பத்தியைப் படித்து பதில் தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்துபோல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

1. பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது ?
3. பெய்த மழை – இத் தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
4. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது ?
5. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை ?

## பகுதி–V (மதிப்பெண்கள் : 24)

அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3 X 8 = 24

43. அ) மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே – வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந்தென்றலே – வளர்
பொதிகை மலை தோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

– கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க. (அல்லது)

ஆ) நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் "மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்" என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. (அல்லது)

ஆ) "பாய்ச்சல்" கதையை கருப்பொருள் குன்றாமல் சுருக்கி வரைக.

45. அ) "விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. (அல்லது)

ஆ) முன்னுரை – உழவே தமிழர் பண்பாட்டின் மகுடம் – உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் – சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் – முடிவுரை. இக்குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதி பொருத்தமான தலைப்பிடுக.

------